# ரமலான் சந்தை கடைகளின் தற்காலிக லைசென்ஸ்சுகளை விற்றால் நடவடிக்கை - அன்வார்



புத்ராஜெயா, பிப். 11-
நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு தற்காலிக ரமலான் சந்தை கடைகளுக்கு வழங்கப்படும் லைசென்ஸ்சுகளை விற்பது கண்டு பிடிக்கப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்த லைசென்ஸ்சுகள் உடனடியாக ரத்து செய்யப்படும். எனவே பணத்துக்கு ஆசைப்பட்டு லைசென்சுகளை விற்காதீர்கள் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வலியுறுத்தினார்.

நேற்று புத்ராஜெயாவில் பிரதமர் அமைச்சின் பணியாளர்கள் உடனான மாதாந்திர சந்திப்பு கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறினார்.

ஒவ்வோர் ஆண்டிலும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு கோலாலம்பூரிலும் நாட்டின் இதர பகுதிகளிலும் ரமலான் சந்தைகள் நடத்தப்படுகின்றன. கோலாலம்பூரில் நடத்தப்படும் இந்த சந்தைகளுக்கான லைசென்ஸ்சுகள் கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் வழங்கி வருகிறது. தற்காலிக லைசென்ஸ்சுகளை பெறுவதற்காக ஏராளமான வணிகர்கள் விண்ணப்பம் செய்கின்றனர். அவர்களுக்கு லைசென்சுகள் வழங்கப்படுகின்றன. ஆனால் சிலர் தங்களின் லைசென்ஸ்சுகளை மூன்றாம் தரப்புக்கு விற்பது தொடர்பான புகார்களும் கிடைத்திருக்கின்றன.

தரகர்களின் ஆசை வார்த்தையை நம்பி பணத்திற்காக இப்படி விற்பனை செய்வது சரியான செயல் அல்ல. இனி விற்பனை செய்வது தெரிய வந்தால் உடனடியாக அந்த லைசென்சுகள் ரத்து செய்யப்படும்.

அதே வேளையில் கோலாலம்பூர் மாநகரில் வெளிநாட்டவர்கள் நடத்தி வரும் சட்டவிரோத வர்த்தகமும் முற்றாக முறியடிக்கப்படும் என்றும் அன்வார் கூறினார்.